மலையகத் தொடர்-3

# மலையகத் தமிழர்-
# தேசிய இனமே



அருட் திரு ச. கீதபொன்கலன்

# யார் என்ற கேள்வி

மலையக மக்கள் யார் என்ற கேள்வி எழும் போதெல்லாம் அவர்கள் ஒரு தனித் தேசிய இனம் என்றே எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக இலங்கையின் வரலாற்றை அறிந்த எவரும் இந்த நிலைப்பாட்டை சந்தேகிக்கவே முடியாது.

உலகளாவிய முறையில், கடந்த சில நூற்றாண்டுகளில் நடைபெற்ற அரசியல் பரிணாம வளர்ச்சியில் நாட்டினங்களின் எழுச்சி மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. மன்னரிடம் இருந்த இறைமை மக்களிடம் சென்றதும், மக்கள் தம்மை நாட்டினங்களாக தொகுத்துக் கொண்டதும் இந்த கால கட்டத்தில் தான். இலங்கையை பொறுத்தவரை முதலாவதாக மன்னரிடமிருந்தும், பின்னர் அந்நிய ஆட்சியாளர்களிடமிருந்தும் கைமாறி ஒரு சுதந்திர நாடானது. ஆனால் 1920 ம் ஆண்டளவில் உருவான பௌத்த எழுச்சி இயக்கம் இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடென்ற கொள்கையை பரப்பியது. இந்த வரலாற்று முரண்பாடான கொள்கையை பரப்பிய டேவிட் ஹேவா வித்தாரண (அநகாரிக தர்மபால) அன்று நாட்டின் மக்கள் தொகையில் 65 வீதமே சிங்கள பௌத்தர்கள், மீதி 35 வீதத்தினரும் வேறு மதத்தையும், மொழியையும் கொண்டிருந்தனர் என்பதை மூடி மறைக்க முற்பட்டவர் என்றே கூற வேண்டும். இந்த கொள்கையை அன்றைய பிரித்தானிய ஆட்சியாளர் ஆதரிக்காத படியால், 1931 ஆண்டில் நடைபெற்ற முதலாவது அரச சபைத் தேர்தலில், தனிச்சிங்கள அமைச்சரவை மூலம் இந்த இனவாதக் கொள்கை படிப்படியாக பரப்பப்பட்டது. இதன் விளைவு மற்ற இன மக்கள் நாட்டில் இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்பட்டதே. மலையக மக்களைப் பொறுத்தவரை இவர்கள் அந்நியர் என்றும், நாட்டில் இருக்க உரிமையற்றவரென்றும் பிரச்சாரம் செய்து, இவர்களை படிப்படியாக நாடு கடத்துவதற்கான திட்டங்களை 1931 ம் ஆண்டுக்கு பின் நடைமுறைப்படுத்த தொடங்கினர்.

ஆனால் இந்த மலையக மக்கள் 1884 ம் ஆண்டிலிருந்து தேயிலைச் செய்கை வளர்ந்த கால கட்டத்திலிருந்து இலங்கையின் மலைப்பகுதிகளில், சிங்களவர் கால் வைக்காத 3000 அடிக்கு மேல் நிரந்தரமாக குடியேறியவர்கள். இதற்கு சான்றாக 1931ல் நடைபெற்ற அரசவைத் தேர்தலில், மலையக மக்களின் பெயர்கள் தேர்தல் இடாப்பில் பதியப்பட்டுள்ளதை காணலாம். 1931ம் ஆண்டு தேர்தல் இடாப்பில் ஒரு இலட்சத்திற்கு அதிகமான மலையக...

(கடைசிப்பக்கம் பார்க்க)

அத்தியாயம் - 1

# மலையகத் தமிழர் யார்?

இலங்கையில் பல இன மக்கள் வாழ்கின்றனர். சிங்களவர் தமிழர் பறங்கியர், முஸ்லிம்கள் போன்றோர் வாழகின்றனர். இவர்களுடன் மலையகத் தமிழர் என்ற ஒரு பிரிவினரும் உளர். இவங்களது பூர்வீ-கம் இந்தியாவே. அதாவது இவர்களது மூதாதையர் அனைவரும் இந்-தியாவில் இருந்து வந்து இலங்கையில் குடியேறியவர்களே. எமது இப்போதைய கவனத்திற்கு நாம் மலையகத் தமிழரை எடுத்துக்கொள்வோம். மலை நாட்டுத் தமிழர் என அழைக்கப்படுவோர் 1828ம் ஆண்டு தொடக்கம் 1946ம் ஆண்டு வரையும் இலங்கைக்கு வந்தவர்வர்களே. இதற்குப்பின் வந்தவர்கள் சட்டவிரோதமாக குடியேறியவர்கள் என கருதப் பட்டனர்.

## 1.1 மலையகத் தமிழர்களின் வருகை,

அந்நிய காலணித்துவ ஆட்சி ஆரம்பமாவதற்கு முன்பாகவே இவர்கள் இலங்கைக்கு வந்துள்ளனர். வியாபார நிமித்தமாக இவர்கள் அடிக்கடி விஜயம் செய்துள்ளனர். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்திலேயே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியத் தமிழர்கள் வாசனைத் திரவிய தோட்டங்களில் பணிபுரிவதர்க்காக வந்துள்ளனர் என்பதற்கு சரித்திர ஆதாரமுண்டு. ஆயினும் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில்தான் பெருந் தோட்டப் பயிர் செய்கையில் ஈடுபடுத்துவதற்காக பெருந்தொகை-யான இந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டனர். பெருந் தோட்டகளின் அதிகரிப்புக்கு ஏற்ப தொழிலாளர்களின் எண்-ணிக்கையும் அதிகரித்துள்ளது என்பதை கீழ்காணும் அட்டவணை விளக்குகிறது.

**பெருந்தோட்டங்களின் சனத்தொகை. - அட்டவணை I**

| வருடம் | தோட்டங்களின் எண்ணிக்கை | தோட்டங்களில் உள்ள சகலஇன மக்கள் | ஆண்கள் | பெண்கள் | தோ: வே; அமர்த்தப்பட்ட இ. மக்கள் |
|---|---|---|---|---|---|
| 1871 | 996 | 1,23,654 | 81,362 | 42,292 | 1,09,444 |
| 1901 | 1,857 | 4,41,601 | 2,46,922 | 1,94,679 | 4,36,622 |
| 1911 | 1,833 | 5,13,467 | 2,78,558 | 2,34,909 | 4,40,285 |
| 1921 | 2,367 | 5,68,850 | 3,00,867 | 2,67,983 | 4;93,944 |
| 1931 | 3,288 | 7,89,934 | 4,16,387 | 3,73,547 | 6,92,540 |
| 1946 | | 8,51,359 | | | 6,65,853 |
| 1953 | | 10,08,653 | | | 8,09,084 |
| 1963 | | 11,46,297 | | | 9,43,793 |
| 1971 | | 11,61,611 | | | 9,51,785 |

## 1.2 தோட்டத்திற்கு புறம்பாக மலையகத் தமிழர்

மலையகப் பிரதேசங்களில் தோட்டங்களை உருவாக்கியதுடன், இலங்கையின் புகையிரதப் பாதைகளை அமைப்பதிலும் பெரும் பங்காற்றியவர்களும் இவர்கள் தான். இலங்கை அரசாங்கத்தின் பொதுவேலைத் திணைக்களத்திலும், வேலைசெய்ய இந்த இந்தியத் தொழிலாளர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதை கீழ்காணும் அட்டவணை உறுதிப்படுத்துகிறது.

**புகையிரதப் திணைக்களத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட தோட்டத் தொழிலாளர் - அட்டவணை II**

| *1901* | *1902* | *1903* | *1904* | *1905* | *1906* | *1907* |
|---|---|---|---|---|---|---|
| | | *2,804* | | *1,941* | *4,274* | *1,873* |

Source: Indians in Sri Lanka by H. P. Chattopadhyaya

**பொது வேலைத் திணைக்களத்தால் வேலைக்கமர்த்தப்பட்ட தோட்ட தொழிலாளர்—அட்டவணை III**

| | 1901 | 1902 | 1903 | 1904 | 1905 | 1906 | 1907 |
|---|---|---|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 4,648 | 12.470 | 6,750 | 7,398 | 12,368 | 20,175 | 21,651 |
| ஊவா மாகாணம் | 45 | 362 | 941 | 533 | 1,149 | 2,664 | 2 463 |
| சப்ரகமுவ மாகாணம் | 86 | 86 | 156 | 3,640 | 86 | 1,568 | 3,126 |
| மேல் மாகாணம் | | 75 | | | | 21 | |

## 1.3 ஆரம்ப வாழ்க்கை கண்டி இராச்சியத்தில்

ஆரம்பத்திலிருந்து இம்மக்களின் பெரும்பான்மையினர் கண்டி இராச்சியத்தின் மலைப் பிரதேசத்திலிருந்த காடுகளிலேயே குடியேற்றப் பட்டனர். இலங்கையின் கண்டிய சிங்களவர் 2000 ம் அடிக்கு கீழேயே குடியிருந்தனர். அக்காலத்தில் கண்டி இராச்சியம் தற்போதைய மத்திய, ஊவா, சபரகமுவ மாகாணங்களின் பெரும்பகுதியை உள்ளடக்கியதாக இருந்தது. இப்பிரதேசங்களில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கைகளும் ஆரம்பிக்கப்பட்டன என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். இலங்கையில் குடியேற்றவாதம் என்னும் புத்தகத்தில் "கண்டிய மேட்டு நிலங்கள்" என்ற தலைப்பில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது கண்டிய மேட்டு நிலங்கள், மத்திய, சப்பிரகமுவ, ஊவா மாகாணங்களின் பெரும் பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தன, மத்திய மேட்டு நிலங்கள் தென் மேற்கு ஈரவலையத்தைச் சேர்ந்ததாகவும், 100 தொடக்கம் 200 அங் குல சராசரி வருட மழை வீழ்ச்சியை கொண்டதாகவும் இருந்தன. இந்த மேட்டு நிலங்களின் தென்மேற்கு எல்லையானது தீவின் வரட்சி வலை யத்தைச் சேர்ந்ததாகவும் சராசரி மழை வீழ்ச்சியை கொண்டதாகவும் இருந்தது. உள்ளே இருந்த மலைத்தொடர்கள் 5000 தொடக்கம் 6000 அடிவரை உயரம் உள்ளதாகவும் காடுகள் நிறைந்ததாகவும் இருந்தன. கண்டி இராச்சியத்தின் முக்கிய சிறப்பியல்பாக விளங்கியது அதனுடைய நெருக்கமில்லாத சனத் தொகையாகும். இதற்கு காரணங்கள் பல. போர்த்துக்கேயருக்கும் கண்டியருக்குமிடையில் நடந்த போர், அதைத் தொடர்ந்து ஒல்லாந்தருக்கும் கண்டியருக்குமிடையில் நடந்த போர், மரணத்தை உண்டுபண்ணக் கூடிய தொற்று நோய் பரவியமை, பல

கணவர்களை மணந்துகொண்டவை, குறைந்த மட்டத்திலான கல்வியும் பொருளாதார உற்பத்தியும் இவர்கள் சனத்தொகை குறைந்ததற்கு காரணமாக அமைந்தன. பிரித்தானிய குடிசன மதிப்பீட்டு அறிக்கையின் படி 1824ல் கண்டிய இராச்சியத்தில் 256, 835 மக்களே வாழ்ந்தனர். கண்டிய இராச்சியத்தின் தலை நகரமாகிய கண்டியில் 1818ல் 3000 பேரே இருந்தனர்,

## 1.4 இலங்கையின் சனத்தொகை.

மலையகத் தமிழரை சமீபகால இந்திய வம்சாவழித் தமிழர் என்று அரசியல் சட்டத்தில் இடம் பெற்றாலும் 1948ம் ஆண்டுவரையும் இலங்கைத் தமிழர்களாகத்தான் கணிக்கப்பட்டார்கள் என்பதை கீழே உள்ள அட்டவணை தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. ஆனால் 1900ம் ஆண்டு இவர்கள் கண்டியத் தமிழர் என்று அழைக்கப்பட்டதற்கு சரித்திர வரலாறு இருக்கிறது. அதுமட்டுமன்று 1953ம் ஆண்டு வரை பெரும் பான்மை இனத்தவருக்கு அடுத்தபடியாக சிறுபான்மை இனத்தவருள் முதலிடத்தை வகித்து வந்தவார்கள் என்பதற்கும் கீழே உள்ள அட்டவணை சான்று பகரும். ஆனல் 1981ம் ஆண்டளவில் சிறுபான்மை இனத்தவருள் மூன்ருவது இடத்திற்கு இவர்கள் தள்ளப்பட்டார்கள் என்பதையும் அட்டவணை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

### இலங்கையின் பிரதான இனங்கள் (1901-1981)

**அட்டவணை IV**

| வருடம் | சிங்களவர் | இலங்கை தமிழர் | இந்திய வம்சாவழி தமிழர் | முஸ்லிம்கள் |
|---|---|---|---|---|
| 1901 | 65.4 % | 26.7 % | — | 6.4 % |
| 1946 | 69.2 % | 11.0 % | 11.7 % | 5.6 % |
| 1953 | 69.3 % | 10.9 % | 12.0 % | 5.7 % |
| 1963 | 71.2 % | 11.1 % | 10.6 % | 6.3 % |
| 1971 | 71.9 % | 11.1 % | 9.4 % | 6.5 % |
| 1981 | 73.98 % | 12.6 % | 5.56 % | 7.12 % |

அட்டவணை IV இல் காட்டப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் என்ற தலைப்பின் கீழ் உள்ள விகிதாசாரத்திற்கான சில குறிப்புகள்;-

**1.4.1 1948ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தின் பயனாக இலங்கையில் வாழ்ந்த பெரும்பான்மை இந்திய வம்சா வழியினர் தமது குடியுரிமையும் வாக்குரிமையும் இழந்தனர். இன்று வரை பல பிரஜாவுரிமை சட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் பலர் அடிமை நிலையிலேயே வாழ்கின்றார்கள்.**

**1.4.2** முதலாவது, **சிறுபான்மையினர் 1953ம் ஆண்டுக் கணகெடுப் பின்படி இந்திய வம்சா வழியினர் சிங்கள மக்களுக்கு அடுத்த பெரும் பான்மையினமாக வாழ்ந்து வந்திருக்கின்றனர்.**

**1.4.3** ஆனால் **1981ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்திய வம்சா வழியினர் மூன்றும் இடத்திற்கு தள்ளப்பட்டனர். இதற்கு காரணங்கள் பின் வறுமாறு.**

1. பலதிட்டமிடப்பட்ட ஆட்கடத்தல் ஒப்பந்தங்கள்.
2. மலையக மக்களுக்கென விசேஷ விதமாக அமுலாக்கப்பட்ட ஊக்குவிப்பு பணத்துடன் கூடிய குடும்ப திட்ட நடவடிக்கைகள்
3. பற்பல காலகட்டங்களில் நடைபெற்ற வன்செயல்களின் காரமாக இடம்பெயர்ந்தமையும், சிதறடிக்கப்பட்டமையும்.
4. சனத்தொகை புள்ளி விபரம் எடுக்கப்பட்ட போது முறையாக எடுக்கபடாமை. புள்ளி விபர அலுவலர்கள் சகல தோட்டங்களையும் தரிசிக்கவில்லை, தரிசித்த தோட்டங்களிலும் அந்த நேரத்தில் இருந்தவர்களை மட்டுமே பதிவு செய்தமை.
5. தோட்டங்களிலிருந்து பிற இடங்களுக்கு குடி பெயர்ந்தவர்கள் (நகரங்கள், கிராமங்கள்) இலங்கை தமிழர்கஎென்று கருதப் பட்டமை.
6. குடிசன மதிப்பீட்டு முறைகள் ஒரு மதிப்பீடே தவிர அது முழுமையானதாக இருக்க முடியாமை.
7. சிறுபான்மையினரை மேலும் சிறு பான்மையினராக்கும் கொள்கைகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டியனவ

**1.5 மலையகத் தமிழர்.**

**இவர்களை நான்கு பிரிவுகளாக பிரிக்கலாம்:-**

1. வர்த்தகப் பிரிவினர்
2. உயர்நுட்பத் தொழிலாளர்
3. தோட்டத் தொழிலாளர்
4. தோட்டம் சேரா தொழிலாளர்

இவர்களிற் பெரும்பாலானோர் (70% க்கும் அதிக்மானோர்) தேயிலை, றப்பர், தென்னைத் தோட்டங்களின் பணிபுரிபவர்களாகவே இருக்கின்றனர். இத்தோட்டத் தொழிலாளர்கள் தான் ஏறக்குறைய 3000 அடிக்குமேலுள்ள மலைப்பிரதேசங்களில் முதன் முதலாக குடியேறியவர்கள் என்பதை நாம் விசேடமாக கவனிக்க வேண்டும். கொடிய மிருகங்கள் வாழகின்ற காடுகளை அழித்து களனிகளாக்கியது மட்டுமன்று இலங்கையின் புகையிரதப் பாதைகளை அமைப்பதிலும் பெரும் பங்காற்றியவர்களும் இவர்கள் தான். பெண் தொழிலாளர்களை அதிகம் கொண்டுள்ளதுடன், இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையானவர்களாக இருப்பதும் இவர்கள்தான். அண்மைக் காலம் வரை அந்நிய செலாவணியின் 70% இலங்கைக்கு தேடிக் கொடுத்தவர்களும் இவர்கள் தான். இன்றும் கூடுதலான அளவு அந்நிய செலாவ-ணியை கொடுப்பவர்களும் இவர்கள் தான். கணக்கெடுப் பின்படி தற்போது இவர்களால் 32% அந்நிய செலாவணி ஈட்டிக் கொடுக்கப்படுகிறது.

## 1.5 மலையகம் தனித் தேசிய இனம்.

கடந்த 175 வருடங்களாக இந்த மக்கள் பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். 1900ம் வருடம் வரை இவர்கள் கண்டியத் தமிழர் என்று அழைக்கப்பட்டனர். 1901ம் ஆண்டிற்கும் 1946ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் இலங்கைத் தமிழர்களென்று இலங்கையின் சனத்தொகை கணக்கெடுப்பின்படி அழைக்கப்பட்டனர். இலங்கை அரசின் யாப்பின்படி 1948ம் ஆண்டிற்குபின் இந்திய வம்சா வழியினர் என்று அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் நடைமுறையில் மலையக தமிழ் மக்கள் பெரும்பான்மை இனத்தவரின் அரசியல்வாதிகளாலும் பல்வேறு பெயர்களால் குறிப்பாக நாட்டின் முதுகெலும்பாக திகழ்ந்த இந்த மக்களை அவர்கள் மாண்பை குறைத்து கணிக்கும் வண்ணம் இழிவான பெயர்களை சூட்டி அழைக்கின்றனர். உதாரணமாக 175 வருடமாக இலங்கையில் வாழ்ந்த இலங்கையராகவே வாழும் இவர்களை இந்தியத் தமிழர் எனவும் அவர்கள் மனம் புண்படும்படியாக அவர்கள் சமூக அந்தஸ்த்தை தாழ்த்தி கூலியர் என்றும், முறையற்றவிதமாக நாட்டில் புகுந்தவர்களென்று இழிவுபடுத்த கள்ளத்தோணியென்றும், அவர்கள் பண்பாட்டை குறைகூறும்வண்ணம் தோட்டக்காட்டான் எனவும் அழைக்கப்படுகின்றனர்.

அண்மையில் ஒரு ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒரு அரசியல்வாதி இவர்களை ஒட்டுண்ணி என்று கூட அழைத்தார். அதாவது ஒரு நாயில் உள்ள உண்ணியுடன் ஒப்பிட்டார். ஆனால் தற்போதைய ஜனாதிபதி எல்லா சிறுபான்மை மக்களையும் ஒட்டுண்ணி என்றும் கூறியதை இங்கே நினைவூட்ட விரும்புகின்றோம்.

இந்த மக்கள் கடந்த 175 வருடங்களாக ஒரு குறிப்பிட்ட பிரதேச த்தில் செறிந்து வாழ்கின்றனர். தமக்கென ஒரு மொழி, பொருளாதார வாழ்வு. தனித்துவமான கலாசாரம், பாரம்பரிய பிரதேசம் இவற்றை கொண்டு வாழ்கின்றனர். எனவே மலையக மக்கள் ஒரு குறிப்பிட்ட பிர தேசத்தில் செறிவாக வாழும் தனியான வரலாற்றும் பின்னணியைக் கொண்ட ஒரு தேசிய இனமாகும். இந்த மக்கள் கடந்த 175 வருடங்க ளாக ஒரு உழைக்கும் பாட்டாளி வர்க்கமாகவே இருந்து வருகிறது.

இவர்களை தனித் தேசிய இனமாக ஏற்றுக்கொள்வதால் பிரச் சினைகள் உருவாகும் எனச் சிலர் எண்ணக் கூடும் 1952ம் ஆண்டு சமீபகால இந்திய வம்சா வழியினர் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள் ளப்பட்டுள்ளனர் மேலும் வேற்றுமைகள், பிளவுகளுக்கல்ல, வளர்ச்சி க்கே வழிவகுக்கும். தனித்துவமான வேற்றுமைகள் இல்லாவிட்டால் வலுவான ஒற்றுமை இருக்க முடியாது. ஒவ்வொரு வரிடமு முள்ள தனி த்துவமான வேற்றுமைகளை நாம் மதிக்கப் பழகவேண்டும். இதன்மூலம் நிலையான ஒற்றுமை ஏற்படும். எனவே பல்லாண்டு காலம் நமது நாட் டில் வாழ்ந்து வரும் மலையக மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்த கருத்து மலையகத்தோடு சேர்ந்த பல புத்தி ஜீவிகளுடைய கருத்தாகும். இதையொட்டிய பல சிந்தனைகள் பத்திரி- கைகளிலும் வெளியாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பாரம்பரிய தமிழ் மக்களிடமிருந்து மாறுபட்ட கலை கலாச்சாரத்தை கொண்டுள்ள மலைநாட்டுத் தமிழர்கள் பிரஜா வுரிமைச் சட்டம் நிறைவேறும் வரை இந்நாட்டுப் பிரஜாகளாக சகல உரிமைகளுடன் வாழ்ந்து வந்தனர் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

ஆகவே மலையகத் தமிழ் மக்களும், மலையகத் தமிழரின் நல னில் ஆர்வமுள்ளவர்களும் பின் வரும்கருத்துக்களில் தீவிர கவனம் செ- லுத்தி செயல் படுவது மலையக மக்களின் வருங் காலத்தை வளம்படு- த்துவதாக அமையும் என நம்பப்படுகிறது.

1 ஏறக்குறைய 7 தலை முறைகளைக் கண்டு 175 வருடங்களுக்கு மேலாக இந்நாட்டில் வாழ்ந்து வருகின்ற மலையகத் தமிழரை இந்தியர் என்ற அடைமொழிச் சொல்லால் அழைப்பதை தவிர் க்க வேண்டும்.

2 இவர்கள் கலை, கலகச்சாரம், மொழி, மரபு, வாழும் பிரதேங் கள் யாவும் பாதுகாக்கப்பட வேண்டிய அதே முறையில் இவர் களை ஒரு தனி இனமாக அங்கீகரிக்க வேண்டும்.

3 இவர்கள் ஒரு தனி அரசியல் சக்தியாக உருவாக வேண்டும்.

4 ஏனைய பிரஜைகளைப் போல இவர்களும் இந்நாட்டில் சரிசமனாக நடத்தப்பட வழி அமைக்க வேண்டும்.

5 இவர்களை இலங்கை மலையகத் தமிழர் என்றோ வேறு பொருத்தமான பெயரிலோ அழைக்க வேண்டும். (இதைப் பற்றிய ஆலோசனைகள், அபிப்பிராயங்கள் வரவேற்கப்படும்.)

## முடிவுரை:

மலையக மக்கள் தனித் தேசிய இனம் என்று ஏற்றுக்கொள்வதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் இன்னமும் பெரும் தோட்டத் துறை அமைப்பின் கீழேயே இவர்களின் நாளாந்த நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இவர்கள் இன்னமும் தேசிய ரீதியாக சரிசமனாகக் கணக்கெடுக்கப்பட வில்லை. இன்னமும் இவர்களிற் சிலர் நாடற்றவர் என்ற ரீதியில் கணிக்கப் படுவதும் கவலைக்குரிய விடயமாகும்.

1935ம் ஆண்டு தொடக்கம், குறிப்பாக 1948ம் ஆண்டிற்கு பிறகு தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் அரசாங்கம். பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்களை குடியேற்றி அவர்களுடைய மொழி, இனம் மதம் பாதிக்கப்படாமல் அவைகளை காப்பாற்றி வந்ததோடு, அவர்களுக்காக புதிய தேர்தல் தொகுதிகள், உப அரசாங்க பிரிவுகள் கிராம சேவகர்கள், பாடசாலைகள் போன்றவற்றை அரசாங்கமே கொடுத்துள்ளது. ஆனால் மலையக தமிழர்க்கென்று இன்னமும் உபஅரசாங்க பிரிவுகளோ, கிராம சேவகர்களோ, அவர்களது மொழி, இனம், மதம் போன்றவற்றை வளர்க்க எந்தவிதத்திலும் முன்வராததையிட்டு, இந்த மக்களை இன்னமும் ஒரு தனி இனமாக நடைமுறையில் ஏற்றுக்கொள்ளவில்லையென்றே கூறவேண்டும்.

> பணக்காரர்களிடமிருந்து பணத்தையும் ஏழைகளிடமிருந்து ஓட்டுக்களையும் வாங்கிக்கொண்டு, ஏழைகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன் என்று பணக்காரரிடமும், பணக்காரர்களிடமிருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன் என்று ஏழைகளிடமும் செல்லுகிறவனே அரசியல்வாதி.
>
> — எலிமி டிக்கன்சன்

(முன உள்ளட்டைத் தொடர்ச்சி) மக்களின் பெயர்களும், 1941ல் நடைபெற இருந்த தேர்தலில் 2,25,000 பெயர்களும் பதியப்பட்டிருந்தன. இந்த உண்மைச் சான்றுகளையெல்லாம் மறைத்து மலையகத் தமிழர் அந்நியர், நாடற்றவர் என்பது இனவாதத்தின் கடுமையான ஒரு நிலை என்பது கண்கூடு.

சுதந்திரம் அடைந்த நாடுகளில் பெரும்பான்மை மக்கள் தங்கள் மத்தியில் வாழ்ந்த சிறுபான்மை மக்கள் மேல் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தி அவர்களது மதம், மொழி, கலை, கலாச்சாரம் யாவற்றையும் புறக்கணித்து வாழ்ந்தனர். இதன் விளைவு சிறுபான்மையினர் தங்களுடைய மொழி, பண்பாடு, வாழும் முறை, சமய வழிமுறை முதலியவற்றை கடந்த காலத்தை விட அதிகமாக அடையாளங் கண்டு அவற்றில் ஊன்றி நிற்கத் தொடங்கினர். இந்த நிலை இலங்கையில், சிறப்பாக மலைவாழ் மக்களிடையிலும் எற்படத் தொடங்கியது. இப்படிப்பட்டதொரு நிலமை தலைதூக்கி நிற்பதைக் கண்ட சிங்கள இனவாத ஆட்சியாளர், சட்ட மன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை மூலமாக சிறுபான்மை மக்களை மென்மேலும் அதிகமாக அடக்க முற்பட்டனர். ஆனாலும் அடக்கு முறைக்கு உள்ளான மக்களில் இலங்கை தமிழர், முஸ்லீம் மக்கள் தாங்கள் ஒரு தனி தேசிய இனம் என்பதை அதிகமாக வலியுறுத்துவதில் பின்னடையவில்லை. மலையகத் தமிழர் இந்த நிலையில் மற்றவர்களைப் போல் தாங்களும் ஒரு தனித்தேசிய இனம் என்று நிலைநாட்ட, அவர்களை வழி நடத்திய தலைவர்கள் தூரநோக்கு சிந்தனையுடன் செயற்படவில்லை. அவர்களின் சுயநலம், தெளிவற்ற செயற்பாடுகள் மலையக மக்களின் உன்னத இலக்கை அடையவிடாமற் தடைசெய்த முக்கிய காரணிகள் என்று கூறலாம். ஆனாலும், இன்று தெளிவான சிந்தனையுடனும், இலட்சிய தாகத்துடனும் செயலாற்றும் மலையக இளைஞர், புத்திஜீவிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய உத்வேகம் செயற்படுத்தப்படுமானால், அரசியல்வாதிகளை, சுயநலமே வாழ்வாகக் கொண்ட தலைவர்களை தவிர்த்து, தங்கள் இலக்கை அடைய முடியும். மலையகத் தமிழருக்கென ஒரு தனிஅரசியற் கட்சியை உருவாக்கினால் தான் இந்த புனிதமான நோக்கத்தை அடைய முடியும் என்பது எமது கருத்தாகும்.

## மலையக மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

பேரினவாத அடிப்படையில் (ஒப்பந்தங்கள், வன்செயல்கள், குடியேற்றங்கள்) ஒடுக்கப்பட்ட இம்மலையக மக்களை, மலையக தலைவர்கள் (மேல்தளவர்க்கம்) அற்பசலுகைகளுக்காக, மக்களை ஒடுக்கிய அதே பேரினவாத அரசாங்கத்துடன் இணைந்திருப்பதனால், மலையக தமிழருடைய பிரச்சினைகள் தீரப்போவதில்லை. அவர்கள் சிந்தனைகள், அவர்கள் ஒரு தேசிய இனம் என்ற கொள்கை முதலியன சிதறடிக்கப்படுகின்றன. எனவே ◌லையக மக்களே விழித்தெழவேண்டும். அவர்களே தங்கள் முடிவை ◌ர்ணயிக்க ஒன்றுபட்டு செயற்படவேண்டும்.

*சிந்தனையாளர்களே,*

எமது லியோ மார்கா ஆஸ்ரத்தின் ஆவணப்பகுதியின் "மலையக ஆய்வுக்களம" தனது மலையகத்தொடர் வரிசையின் மூன்றாவது பிரசுரமான "மலையகத் தமிழர்-தேசிய இனமே" என்ற வெளியீட்டை உங்கள் கைகளில் தந்துள்ளது. ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் யாவரும் புதுவாழ்வு பெற வேண்டுமென்பதே எமது நிறுவனத்தின் ஒரே நோக்கம். எமது மக்கள் சிந்திக்க வேண்டும். சிறப்பாகச் செயலாற்ற வேண்டும். இதற்கு சீரிய கருத்துக்களைத் தாங்கி வரும் பிரசுரங்கள் ஒரு பக்கபலம் என்பது மறுக்க முடியாத உண்மை. இதைக் கருத்தில் கொண்டுதான் எமது மலையக ஆய்வுக்களம் மூலமாக வெளியிடும் ஒவ்வொரு பிரசுரத்திலும் கருத்துக்களை வழங்கி வருகிறோம். எனவே இம் மலையகத்தொடர் பற்றிய உங்கள் கருத்துக்களையும், மலையக மக்களுக்கு இத்தொடர் மூலமாக நீங்கள் தெரிவிக்க விரும்பும் விடயங்களையும் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். இதற்கு முந்திய இரு வெளியீடுகளும் உங்கள் கைவசமில்லாவிடில், அன்றேல் உங்கள் நண்பர்களும் இவற்றை வாசித்து பயனடையவேண்டுமென்று விரும்பினால் கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

1. மே தினமும் தொழிலாளரும். – ரூபா 5.00
   மலையகத் தொடர் – 1

2. மலையகத்தொழிலாளர், வீடு-காணி சொந்தம் ? – ரூபா 20.00
   மலையகத் தொடர் –2

3. மலையகத் தமிழர் – தேசிய இனமே – ரூபா 8.00
   மலையகத் தொடர் – 3

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :-

மலையக ஆய்வுக்களம்,
121/1, புனித தோமஸ் வீதி,
பண்டாரவளை,
இலங்கை.